2009 ஜூலை 3]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரத்தநாடு மற்றும் ஈச்சங்கோட்டையில் உள்ள பண்ணைகளில் இப்போதும் நல்ல முறையில் ஆடுகளும், மாடுகளும் பராமரிக்கப்பட்டு வருகின்றன. எனினும், தவறுகள் இருந்தால் அவற்றை விரைவில் சரி செய்ய இந்த அரசு முயற்சிகளை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 83, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞா. ஜாண் ஜோசப், மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

83—

படகு சவாரி

***17882—திரு. ஞா. ஜாண் ஜோசப்:**

மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளவங்கோடு தொகுதி, சிற்றாறு அணை, சிவலோகம் பகுதியில் படகு சவாரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) விளவங்கோடு தொகுதி, சிற்றாறு அணை, சிவலோகம் பகுதியில் படகு சவாரியை வணிகரீதியாக இயக்குவதற்கான வாய்ப்புகள் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞா. ஜாண் ஜோசப்.

திரு. ஞா. ஜாண் ஜோசப்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பூமித் தாயின் மடிமீது தவழ்ந்து விளையாடும் நீர் அலைகள், அதிலே மூழ்கிக் குளிக்க முயலும்...

[2009 ஜூலை 3

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வியை மட்டும் கேளுங்கள். கவிதை பாட வேண்டாம்.

முற்பகல் 9-55

திரு. ஞா. ஜாண் ஜோசப்: அதிலே மூழ்கிக் குளிக்க முயலும் சிறு சிறு தீவுகள், அவற்றுக்குப் போட்டியாகத் தண்ணீரில் தன்முகம் காட்ட வரும் மலைகள், திக்கெட்டும் வளர்ந்தோங்கி பச்சைப் பசேல் எனக் காட்சி தரும் காடுகள் என நீர் வளம், நில வளம், மலை வளம், மர வளம் என அனைத்து வளங்களும் ஒருங்கே அமையப்பெற்ற பகுதிதான் சிவலோகம். (சிரிப்பு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜாண் ஜோசப், கேள்வி கேட்கிறீர்களா? அடுத்த கேள்விக்குப் போகட்டுமா?

திரு. ஞா. ஜாண் ஜோசப்: இது சுற்றுலாத் துறை சம்பந்தப்பட்டதனாலே...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதெல்லாம் இருக்கட்டும். கேள்வி கேட்கிறீர்களா, அடுத்த கேள்விக்குப் போகட்டுமா? நேரத்தினுடைய அருமை கருதி நான் வேறு கேள்விக்குப் போக வேண்டி வரும். (குறுக்கீடு) சிவலோகம், பூலோகம் என்று சொல்லிக்கொண்டிருக்கிறீர்கள்.

திரு. ஞா. ஜாண் ஜோசப்: மூலக் கேள்வியே அதுதான். அந்தப் பகுதியில் சிற்றாறு 1, சிற்றாறு 2 என இரண்டு அணைகள் இருக்கின்றன. பிரபலமான புண்ணியத் தலங்களான குருசு மலை, காளி மலை ஆகியவையும் இருக்கின்றன. அந்தப் பகுதிகளுக்கு இப்போதும் நூற்றுக்கணக்கான மக்கள் வந்துகொண்டிருக்கிறார்கள். ஏற்கெனவே அங்கே மலர்ப் பூங்காவும், சிறுவர் பூங்காவும், மீன் பண்ணையும் இருந்தன. தற்போது மீன் பண்ணை மட்டும் இருக்கிறது. அங்கே தமிழ், மலையாள T.V. மற்றும் சினிமாப் படப் பிடிப்புகள் அடிக்கடி நடக்கின்றன. இப்படிப்பட்ட எல்லா முக்கியத்துவமும் கொண்ட அந்தப் பகுதியின் முக்கியத்துவத்தை உணர்ந்துகொண்டு, அதற்கு கூடுதல் நிதி ஒதுக்கி, இழந்த பொலிவை மீட்டு, அப்பகுதியில் படகு வசதி ஏற்படுத்தினால், நிச்சயமாக கன்னியாகுமரி மாவட்டத்திலேயே Number One சுற்றுலா மையமாக அதை மாற்ற முடியும். மண்ணின் மைந்தரான மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சருக்கு இது தெரியாததல்ல. ஆகவே, போதிய நிதி ஒதுக்கி, இதைச் செய்ய அரசு முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

2009 ஜூலை 3]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிற்றாறு அணைப் பகுதி, சிவலோகம் பகுதியெல்லாம் பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான இடங்கள். இருந்தாலும்கூட, மாண்புமிகு உறுப்பினருடைய ஆர்வம் வரவேற்கத்தக்கது. ஆனால், அங்கு வருகின்ற சுற்றுலாப் பயணிகள், கேரள மாநிலத்தைச் சேர்ந்தவர்கள்; மிகவும் குறைவாக வருகிறார்கள். எனவே, பயணிகள் அதிகமாக வருகின்றபோது, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை நிச்சயமாகப் பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞா. ஜாண் ஜோசப்.

திரு. ஞா. ஜாண் ஜோசப்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, NH 47 நெடுஞ்சாலையையொட்டி, குழித்துறையில் பழைய பாலத்திற்கும் புதிய பாலத்திற்கும் இடைப்பட்ட பகுதியில் ஒரு பெரிய நீர்ப் பரப்பு இருக்கிறது; அது இயல்பாகவே உருவான நீர்ப் பரப்பு. அந்த நீர்ப் பரப்பில் படகுப் போக்குவரத்து, சிறுவர் பூங்கா, மற்றும் முதியவர்களுக்கான பொழுதுபோக்கு வசதிகள் ஏற்படுத்த வேண்டும் என்று சுற்றுலாத் துறையைக் கேட்டுக்கொண்டபோது, சுற்றுலாத் துறை எனக்கு ஒரு பதில் தந்திருக்கிறது. அந்தப் பதிலில், மழைக் காலங்களில் அங்கே அதிகமாகத் தண்ணீர் வருவதால், இந்த வசதி செய்ய முடியாது என்று சொல்லப்பட்டிருக்கிறது. மழைக் காலத்தில் எங்குதான் தண்ணீர் வரவில்லை? திற்பரப்பு நீர் வீழ்ச்சியிலும் வருகிறது; குற்றாலம் நீர் வீழ்ச்சியிலும் வருகிறது; மழைக் காலங்களில் அங்கு குளிக்கக் கூடாது என்று தடையும் விதிக்கப்படுவதுண்டு. ஆகவே, அதுபோன்ற இயல்புதான் இங்கேயும். இங்கே எல்லா வசதிகளும் இருக்கின்றன. National Highway-யை ஒட்டியிருக்கிற காரணத்தால், நிச்சயமாக பல்லாயிரக்கணக்கான மக்கள் பயன்படுத்த வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, துறையின் முடிவை மறுபரிசீலனை செய்து, அங்கே படகு சவாரி, பூங்கா உள்ளிட்ட வசதிகளை ஏற்படுத்த அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய

ஆர்வத்தையெல்லாம் அறிந்துதான், கோரிக்கைகளை ஏற்று, அங்கே எங்களுடைய துறையினுடைய அதிகாரிகளை அனுப்பி, அங்கு வருகின்ற பயணிகளுடைய எண்ணிக்கையைப் பார்த்து, அங்கே படகு சவாரி விட்டால் நிச்சயமாக அது சாத்தியக்கூறாக இருக்காது என்ற முடிவு செய்ததன் அடிப்படையில்தான், படகு விடுவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லையென்று கூறினேன். இருந்தாலும்கூட, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய ஆர்வத்தைக் கருத்தில்கொண்டு நிச்சயமாக வருங்காலத்தில் பரிசீலிக்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவலோகத்திற்குச் சென்றால், திரும்பி வர முடியாது. பின் எதற்கு அங்கே படகு சவாரி? (சிரிப்பு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுதர்சனம்.

திரு. டி. சுதர்சனம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் சிவலோகத்திற்குச் சென்று பார்த்திருக்கிறாரா? (சிரிப்பு) அங்கே ஏதாவது, அவருடைய உறவினர்கள், நண்பர்கள் இருக்கிறார்களா? அவர்களைப் பார்த்துவிட்டுத் திரும்பி வந்திருக்கிறாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினர்கள் எல்லோரும் பூலோகத்தைப்பற்றிப் பேசுங்கள். சிவலோகத்தைப்பற்றி ஏன் பேசிக்கொண்டிருக்கிறீர்கள்? (சிரிப்பு) மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜாண் ஜோசப் அவர்கள் சொன்ன சிவலோகத்தை மாண்புமிகு எதிர்க்கட்சியினுடைய துணைத் தலைவர் வந்து நேரடியாகப் பார்த்தால், அதனுடைய அருமை, பெருமைகள் நன்றாகத் தெரியும். அது பார்க்க வேண்டிய இடம்.

2009 ஜூலை 3]

முற்பகல் 10-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே சிற்றாறு-1, சிற்றாறு-2 என்று இரண்டு அணைக்கட்டுகள் இருக்கின்றன. அங்கே 2 Guest Houses இருக்கின்றன. அந்த Guest Houses-லே ஒன்று, 'சிவலோகம்'; மற்றொன்று 'வைகுந்தம்'. (சிரிப்பு) (குறுக்கீடு) நான் வைத்த பெயர் அல்ல; அது நீண்ட நாட்களாக இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 84, (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுதர்சனம்.

திரு. டி. சுதர்சனம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வைகுந்தத்திற்குப் போகப் போகிறாரா அல்லது சிவலோகத்திற்குப் போகப் போகிறாரா என்று அறிய விரும்புகிறேன். (சிரிப்பு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 84, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஜி. லதா, மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்.

84—

சிட்டா நூல்

***56713—திருமதி ஜி. லதா:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடியாத்தம் தொகுதியில் கைத்தறி நெசவாளர்களுக்குச் சிட்டா நூல் விற்பனை நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்கள் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கிறேன்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS